[2002 ஏப்ரல் 18

முற்பகல் 11-15

169—

தொழிற் பயிற்சி மையம்

***11752—திரு. என்.கே. பெருமாள்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விளாத்திக்குளத்தில் அரசு தொழிற் பயிற்சி மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. வ.து. நடராஜன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள விளாத்திக்குளம் ஊராட்சி ஒன்றியத்தில் பச்சையபுரத்தில் வி.பி. ராமலிங்க நாடார் ஐ.டி.சி. என்னும் அங்கீகரிக்கப்பட்ட தனியார் தொழிற் பயிற்சி நிலையம் ஒன்று இயங்கி வருகிறது. இதையும் சேர்த்து தூத்துக்குடி மாவட்டத்தில் 11 அங்கீகரிக்கப்பட்ட தனியார் தொழிற் பயிற்சி மையங்களும், தூத்துக்குடி மற்றும் திருச்செந்தூரில் இரண்டு அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களும் இயங்கி வருகின்றன. இவை தூத்துக்குடி மாவட்டத்தின் தொழிற் கல்வித் தேவைகளைப் பூர்த்தி செய்யும் என்பதால், விளாத்திக்குளம் ஊராட்சி ஒன்றியத்தில் ஏற்கெனவே ஒரு தனியார் தொழிற் பயிற்சி மையம் இயங்கி வருவதாலும், விளாத்திக்குளத்தில் புதிதாக மேலும் ஓர் அரசு தொழிற் பயிற்சி நிலையம் தொடங்குவது அவசியம் இல்லையென அரசு கருதுகிறது.

திரு. என்.கே. பெருமாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நாடு வகுப்பறையில்தான் உருவாகிறது என்பதை மனதில் பதித்து கல்வித் துறையில் இந்தியாவிலே தமிழகம் முதலிடம் பெற்றிட முத்தான நடவடிக்கைகளை எடுத்து வருகின்ற மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி என் வினாவைத் தொடங்குகிறேன். மிகவும் பின்தங்கிய மானாவாரி பூமியான

2002 ஏப்ரல் 18]

விளாத்திக்குளம் தொகுதியில் உள்ள தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, ஏழை எளிய விவசாயிகளின் பிள்ளைகள் தொழிற் கல்வி கற்றிட விளாத்திக்குளம் தொகுதியின் இதயமாக விளங்குகின்ற மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியோடு அடுத்த நிதியாண்டிலேயாவது விளாத்திக்குளத்தில் அரசு தொழிற் பயிற்சி மையம் அமைத்திட மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு ஆவன செய்யுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வ.து. நடராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை யோசிக்கப்படும்.

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்

@(ஏழாம் பட்டியல்)

1—

மேல்நிலைப் பள்ளியாக்குதல்

வினா 10205—திரு. சி. சண்முகம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவள்ளூர் மாவட்டம், பூவிருந்தவல்லி ஒன்றியம், திருமழிசை உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்தும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 2001-2002 ஆம் கல்வியாண்டில் 125 அரசு/நகராட்சி/மாநகராட்சி உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

@ இப்பட்டியலில் உள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதலளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தவையாகும்.